கடவுள் துணை.

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

இது

திருவீரமாநகரம்

பாலகவி வித்வரத்ன

கொ. அ. முஹம்மதிப்றாஹீம்

புலவரவர்களாலியற்றிய

# இந்தியா தலைவர்கள்

# நந்தமிழ் நவீனம்

முதற்பாகம்

கிடைக்குமிடம்:

**பஞ்சசக்தி புத்தகசாலை,**

நெ. 40, 28-வது வீதி,

மங்கம்மாரிமுனை, இரங்கோன்.

Copy Right.] 1926 இதின் விலை அணா 6

இலாஹி

(நண்பர்) இவ்வியாசத்தை கவனிக்கவேண்டாமா?

(அன்பர்) நன்று; நுணுக்கமாக வாசித்தறிகின்றேன்

இந்நூல் சென்னைமாகாணம் திருநெல்வேலி ஜில்லா
ஸ்ரீ வைகுண்டம் தாலுகா, திருமந்திர
நகரென வழங்கும் தூத்துக்குடி
யில் வசித்துவரும்
இந்தியரான
சைவவேளாளமரபி
லவதரித்த சிவயோகியென்பவரால்

**முஹம்மது சல்லல்லாஹு**
**அலைகிவ சல்லமவர்களின் பேரிலியற்றிய**

# திருமணி தீபம்.

யென்னும் புத்தகம் 1-க்கு அணா. 2

திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி தாலுகா சிப்பி
குளம் சிவ ராஜயோகீஸ்வரராகிய ஸ்ரீமான். மெ. சிக்கந்தர்
ருவுத்தரவர்களருளிச்செய்த

திருஞான தீபம். விலை அணா. 4

கூடிய சீக்கிரம் விரைவில் வெளிவரும்.



ஸ்ரீமான் K. A. முஹம்மதிபுருஹீம் புலவர்

ஓம்:

# முன்னுரை.

ஐயன்மீர்!

இவ்வுலகின் கண் கற்றோர் பலர் பல நூல்களியற்று கின்றனர், ஆனால் நூல் களியற்றுவது காலங் கருதி இயற்றுவதுதான் உத்தமம் தற்காலத்தில் நம்இந்தியா சுய ஆட்சி அடையும் பொருட்டு, வேண்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், நம் முன்னேற்றத்தைக் கருதி இத்தேசியக் கீதங்களடங்கிய புத்தகத்தை பாலகவி வித்வரத்ன K. A. முஹம்மதிபுரூஹிம் புலவர் அவர்கள், லோகோபகார்த்த மாய் இயற்றிருக்கின்றார்கள். இந்நூலானது நம் தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு இயற்றித் தந்திருப்பது மிகவும் போற்றற் குறியதாகும். ஆசிரியர் தேச சக்தியோடிணை ந்து நின்று பாடியிருக்கும் பாடல்கள் படிக்கும் எவரையும் தேசீய ஊக்கங் கொள்ளும்படி செய்யு மென்பதிற் சிறிதும் தடையில்லை. மேலும் இப்புத்தகத்தில் அமைக் கப்பெற்றிருக்கும் கீதங்களானது, சிறுசிறு பதங்களால் எளிய நடையில்யாவரும் அறியக்கூடியதாக அமைக்கப் பட்டிருப்பதால், அனைவரும் இலகுவில் படித்துணரக்கூடிய தாக இருக்கிறது. ஆதலால் நம் இந்து முஸ்லீம் சகோ

தரர்கள் இந்நூலை நன்கு ஆதரித்து ஒவ்வொருவரும் வாங்கி படித்து இதுபோன்ற இன்னும் பல நூல்களையும் வெளியிடுமாறு ஆசிரியருக்கு ஊக்கந்தரும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்:

**கொ. நா. சுப்பையா நாயுடு,**

ஆசிரியர்,

"தேசோபகாரி" இரங்கோன்.

இரங்கோன்
1—11—1925

௳

கடவுள் துணை.

வந்தேமாதரம் ☪ 786 அல்லாஹு அக்பர்

வெண்பா.

சீர்மிகுந்த பாரத தேவிசிறை மீட்டுதற்கு
ஓர்மன தாய் நின்றுழைக்கும் உத்தமர்கள்—பேர்மீது
நந்தமிழ் நவீனம் யான் புகல நாதனேயென்
சிந்தை தனில் வந்தருள்வாய் தினம்.

## 1. வந்தேமாதரம்.

மனமாயாராரரே என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக்—தாளம்-ஆதி

பல்லவி.

வந்தே மாதர முபதேசமே-மன
மாரா திருக்க விசுவாசமே.

சரணுநுபல்லவி.

1. இந்து முஸ்லீங்கள் எல்லோருமே தங்கள்
சிந்தையிற் கொள்ளப் பெரும் நயங்காட்டும்-நம்மை
வந்தணுகிடும் கோலத்தன் மோட்டும் (வந்தே)

2. சத்தியம் தழைக்க சகலரும் பிழைக்க
முத்தா நமக்குதித்த பாக்கியமே-இது
உத்தம மஹா ரிஷியின் வாக்கியமே (வந்தே)

3. சுகநலம் நீடவே துயர் பறந்தோடவே
திகழ் படவே யொன்று கூடுவோம்-ஜெய
முஹம்மதி புருஹிந் தமிழ் பாடுவோம் (வந்தே)

---

## 2. மஹாத்மா காந்தி தியானம்.

"கஸ்தூரி கமழ் வாசனே" என்ற வர்ணமெட்டு

**இராகம்-தேசிகம் தாளம்-ஆதி.**

பல்லவி.

ஜெய காந்தி மஹான் பாக்யனே
காருண்யனே (ஜெய)

அநுபல்லவி.

கலி கால மதில் மேலோனெந்த
நாளும் பிரசங்கனே காருண்யனே (ஜெய)

சரணம்.

வேந்த விவேகன்
விற்பனத் தியாகன்
சாந்த நல் யூகன்
தர்ம சொரூபன் மதயாகனே-காருண்யனே (ஜெய)

**தோஹையரு.**

சன்யாசி வேடமே பூண்டதோர் வைதீக
தலைவர் தனக் குபேரன்
சத்தியாக் கிரகமென்னும் யுத்தம் ஜெயிக்கவே
தியாகம் புரிந்த வீரன்

சரணத்தொடர்.

தந்தி ரூபாயன்
சாற்றும் சகாயன்
மந்திர தூயன்
மா-இபுரூஹிம் மது வாயனே காருண்யனே (ஜெய)

---

## 3. ஸ்ரீமான் மஹாத்மா காந்தி துதி.

"ராசவிசுவாச லாலா" என்ற வர்ணமெட்டு

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாக்யவான் காந்தி பதம் பணிவோம்
கதர்த்துணி யணிவோம் சதமெனத் துணிவோம்

அநுபல்லவி.

ஊக்கமே கதிக்க உலகமே தழைக்க (பாக்)

தொகையறு.

நிச்சயமாக நம் சுதந்திரம் பெற்றிட
நிகரற்றவழி கண்டவன்
நீங்காத விரத வைராக்யம் கொண்டு நலம்
நீடிக்கவே விண்டவன்

மகுடம்.

கடல் தயின்றவ னவதாரமா யுதித்தோன்
இடரடிமை பறந்திட வேஜெயம் வகுத்தோன்

பல்லவி எடுப்பு.

ஈடில்லாத பிரசங்கம்
எங்கும் போதிக்கும் சிங்கம் (பாக்)

தொஹையரு.

பொல்லாத் போதை பலலாகிரிவஸ் தெல்லாம்
புரக்கணித்தே தள்ளுவோம்
தொல்லுல கிலினி யென்ன துன்ப வந்திட்டாலும்
சுகமாகச் சிறை செல்லுவோம்

மகுடம்.

பகர்பிறர் சரக்கெல்லாம் பதரெனமதிப்போம்
முஹம்மதி புருஹிம் மாகவி துதிப்போம்

பல்லவி எடுப்பு.

பற்றுதலாடி நாமே
வெற்றி யடைகு வோமே (பாக்)

---

## 4. மஹாத்மா காந்தி வாக்கு

"சுயராக்ஷியமதிக" என்ற வர்ணமெட்டு.

இராகம்-கோக்கர்ஜான் தாளம்-ஏகம்

கண்ணிகள்.

1. ஜெகமதிலே யுழைக்கும் சீமான் மஹாத்மா காந்தி
தெரிவிக்கும் புத்திகளே யுணர்ந்திடு வோம்
சுகிர்த சுகமுறவே சோதரவே பெறவே
துணிந்து பொது நலமே புரிந்திடுவோம் (ஜெக)

தொகையறு

இம்மானிலத்திலே நாம்படுந் துயரகல
இதமானகதரணிகுவோம்
இங்கு முன்னில்லாத அநாகரீக கொள்கைதனை
இன்றொழித்தே மீளுவோம்

பாட்டு

2. நயமிகுந்திடுஞ் சுய ராக்ஷிய மடைந்திட
நாட்டின் கைராட்டினமே சுற்றிடுவோம்
ஜெய வீரரான பலர் சிறையே விட்டகலவே
திகழ்பால இபுருஹிம் புகழ் பாடுவோம் (ஜெக)

---

## 5 தேசவுணர்ச்சி.

"ஆய் மேரா ரச்கிச்சுமர்" என்ற வர்ணமெட்டு

**இராகம்-மோகனகல்யாணி தாளம்-ஆதி**

பல்லவி

கீர்த்தி சேர் காந்திக் கிணை
ஜெக மதிலாரு-யாரு-யாரு-யாரு-யாரு (கீர்த்தி)

சரணநுபல்லவி

1. பூர்த்தி சிறந் தோங்கிடவே
போதை துயர் நீங்கிடவே
பூவில் வந்தே மாதரமே
புகழ் படக்கூறு-கூறு-கூறு-கூறு-கூறு (கீர்த்தி)

2. தீண்டாமையே யொழித்து
சேவை செய்யவே நினைத்து
தேசத்தொண்டராக மனந்
தேரியே சேரு-சேரு-சேரு-சேரு-சேரு (கீர்த்)

3. அன்னை பாரத மாதா
அடிபணிகுவீர் சதா
அடிமைப் பிணி யகல [ரு (கீர்த்தி)
அவனியிற் கோரு-கோரு-கோரு-கோரு-கோ

4. நாடிலுயர் வீரநகர்
நாவலன் முஹம்மதிபு
ருஹிம் புகழத்தமிழே
நாடியே பாரு-பாரு-பாரு-பாரு-பாரு (கீர்த்)

---

## 6. தேசபக்தி.

"இந்தியாவிலிரண்டு எங்கும் புகழ்திரண்டு"
என்ற வர்ணமெட்டு
இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி
கண்ணிகள்

1 தேசாபி காந்தி யுபன்யாச மறிந்துஞ்சும்மா
பேசாதிருக்கலாகுமா—நந்தேயப்பிணி
லேசா விலகிப் போகுமா மிகத்
திடமேவிடுங் கதராடை யணியாது
அடமேவிடு மயலாடையின் மீது
சித்தம் மென் மேலும் பூட்டுறீர்—சிறந்ததேச
பக்த ருறவகற்றுரீர்.

2 பற்றுள்ள நம்மவர்கள் தொட்டகாரியங்கூட
ஒற்றுமையாக நில்லுங்கள்—அடிமைத்தொழில்
விட்டொழிந்திட வெல்லுங்கள்   நம்
பாரதமாதுவி ஞதறவாகவே
தாரணி மீதினில் தீதுகளேகவே
பகருவீர் வந்தே மாதரமே   முஹம்மதிபு
ருஹிந் தேடுஞ் சுதந்தரமே.

---

## 7. ஸ்ரீமான் சுவாமி விவேகானந்தர்.

"கதிர்காமகந்தசாமி" என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

விவே கானந்த சுவாமி
வேதாந்த சித்த நேமி

சரணுநுபல்லவி

மிக்கத் தயவான யோகி
மேன்மை சிறந்த யூகி
வீரப்ர சாரி இந்தி
யோர்க் குபகாரி

மகுடம்

வெற்றி மிகுத்திடும் நற்றவ ஞானி
உற்ற குறை யெடுத்தோதும் நிதானீ
ஓங்கு மேஞடு—சென்று
உரைத்ததற் கீடு—இனி

உண்டோ உலகினில் ஓதிப்புகழ்ந்திடும்
என்று முஹம்மதி புறுஹிம் கொண்டாடும்(விவே)

---

## 8. ஸ்ரீமான். லோகமான்ய பால கங்காதரத்திலகர்

"மாமயிலேறியென்முன் வா வா செந்தூரா"
என்ற வர்ணமெட்டு

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ரூபகம்

பல்லவி

ஜெய பால கங்காதரத் திலகர் போல் சாது
திலகர் போல் சாது, திலகர் போல் சாது
ஜெகமதிலேது (ஜெய)

அநுபல்லவி

சுயவுணர்ச்சி நமக்குத் தோன்றப்ரசங்கம்
தோன்றப்ரசங்கம் தோன்றப்ரசங்கம், தொனித்திட்ட
சிங்கம் ! (ஜெய)

தொஹையறு

அகிலம் புகழ் இந்தியா நன்மை பெற்றோங்கிட
அவதாரமான சீமான்
சகல மதத்தோர்களும் சார்ந்திடக் காங்கிரசு
சபை ஸ்தாபித்த பூமான்

மகுடம்

சந்த மிகுந்திடு மிந்தியர் சொந்த
புந்தி மகிழ்ந்து யுகந்திட வந்த

தரும சித்தாந்த மூர்த்தி
சாந்த முருவான கீர்த்தி (ஜெய)

பல்லவி எடுப்பு.

நற்றவமே சிறந்த ஞானோர் சிநேகன் ஞானோர் சிநேகன்
ஞானோர் சிநேகன் நன்னாகரீகன் (ஜெய)

தொகையரு.

திட்டமாய்ச் சுதந்திரம் பெற்றிட வழி நமக்கு
தெரிவித்த மேதாவியே
திகழ்பால கவிசொல் முகம்மதி புருஹிம் புகழ்
ஜெக மெச்சும் சஞ்சீவியே

மகுடம்.

திருத்திய கைத்தொழில் விருத்திய கருத்தினில்
பொருத்தியத் திறத்துடன் வருத்திட வுரைத்திடும்
தேவலா வன்ய சீலன்
தேசத்தோ ரனுகூலன் (ஜெய)

---

## 9. ஸ்ரீமான் அலி சகோதரர்கள்

"கதிர்காம கந்தசாமி" என்ற வர்ணமெட்டின் பிரிவு

இராகம்-சேஞ்சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி.

மவுலானா முகம்மதலியே ஸ்ரீ
மான் செளக்கதலியே (மவு)

அநுபல்லவி.

மானிலந்தழைக்க பல
மாந்தரும் பிழைக்க
மாராத் தேசத் தொண்டு செய்தார் மகிழ்
கொண்டு (மவு)

தொஹையறு.

முக்கியமானதோர் கிலாபத்தின் கமிட்டியை
முன்னேறச் செய்த சிங்கம்
தக்கப்புகழ் பெற்ற காந்தியின் கட்டளையைத்
தான் விலகாத தங்கம்

மகுடம்

தேசாபிமானஞ் சிறந்த வுல்லாசராம்
தாஸன் முகம்ம திபுருஹிம் நேசராம்
சித்தவைராக்கியவான்—வெகு
உத்தமயோக்கியவான்
தேன்மிகுந்த சீலர்—முஸல் மான் குலத்தோழர்()

---

## 10. ஸ்ரீமான் லாலா லஜபதிராய்

"பழனிமா மலைதனில் வாழும்" என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி.

பல்லவி.

நாடிலுயர் பாஞ்சால லாலா லஜபதியே

அநுபல்லவி.

லாலா லஜபதியே—நமது கிரீடாதி பதியே

சரணம்.

1. ஈடில்லாத சுதேசி இனியதோர் ருபன்யாசி
என்றுஞ் சுயராக்ஷிய மெண்ண மாறிடாதநேசி (நாடி)

2. அயல் நாட்டு சரக்கெல்லாம் அறவே யொழித்த நல்
அடிமைத் தனத்தை யோட்டி ஆசி கூறிட [லான்
வல்லான் (நாடி)

3. மேன்மை குறைவுகண்டு விரத வைராக்யம் கொண்டு
மேல் நாடெங்குமே சென்று மிக்கச் செய்திட்டாரே
தொண்டு (நாடி)

4. தவமுனி காந்தி மந்திரன் சத்யாகிரகத் தந்த்ரன்
தாஸன் முஹம்மதி புருஹிம் போற்றிடுஞ்
சுந்த்ரன் (நாடி)

---

## 11 ஸ்ரீமான் சித்த ரஞ்சன தாஸ்

"நம்பினேனுன்னையே" என்றமெட்டு

இராகம் கல்யாணி தாளம்-ரூபகம்.

பல்லவி.

சித்த ரஞ்சன தாஸ்—இந்து
தேச நேசம் பேசும் வாச (சித்த)

சரணுநுபல்லவி.

1 சுத்த வீரத் தேச பக்தன்
சுய நல மெண்ணுத சித்தன்

உத்தம சன் மார்க்க முத்தன்
ஊக்கம் நோக்கம் யார்க்கும் போதிக்கும் (சித்)

2 சட்ட சபை சார்பில்ச் சென்று
தைரிய மிகவே வகொண்டு
திட்டமா நம் குறைகள் கண்டு
தீரமோடு கூறும் வீர (சித்த)

3 புண்ணிய வதார ஸ்ரீமான்
போதமுனி காந்தி மஹான்
தன்னை மறவாத சகான்
சாத்வீக போராடும் வீர (சித்த)

4 பகருஞ் சுயராக்ஷியப் புவி
பக்தன் முஹம்மதிபுருஹி ங்கவி
சுகம் பெறநாடும் மேதாவி
சோதி நீதியாய் விளங்கும் (சித்த)

---

## 12. ஸ்ரீமான் டாக்டர் அன்சாரி

"குதா குதான சகிராமராமு கருலேங்கே"
என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பைரவி தாளம்-சாப்பு

பல்லவி.

இந்து முஸல்மான்கள் சபா ஏகும் ஜெய அன்சாரி
தந்திரங்கள் நம்மவர்க்கு சாற்றிடுவான் மனந்தேறி

அநுபல்லவி.

நந்தேய சுதந்தரத்தே நமக்கீயு முபகாரி
நாடொன்று கூடிப்புகழ் பாடிடுவோம் தினங்கோரி (இந்)

தொகையறு

வைதீக நுட்பார்ந்த வேதாந்த நூல்களை
வாசித்தறிந்த சீமான்
வையகம் புகழ் சுயராஜ்ஜியக் கருவியாய்
வந்தவதரித்த பூமான்

பல்லவி எடுப்பு

வாதாடியே போராடும் வாய்ந்தகலைப் பெருவாரி
சாதிமத பேதங்களை தானகற்றுவான் சீறி (இந்து)

தொகையறு

லக்னோ மகா நாடு சங்கத்திலே சபா
நாயகராக நின்றோன்
நழுவாத ஊக்கமது நம்மவர்க் குதித்திட
நன்னயமாக விண்டோன்

பல்லவி எடுப்பு.

நந்தமிழ் நவீனமலர் நாளும் பாடியே தூறி
நாவலன் முஹம்ம திபுரூஹிம் கவியே கூறி (இந்து)

---

## 13. ஸ்ரீமதி சரோஜினி தேவி

ஸ்ரீராம பாதமா என்ற வர்ணமெட்டு

இராகம்-அமிர்தவாஹினி தாளம்-ஆதி.

பல்லவி.

தேவி சரோஜினி தேசீய வாசனி
சேவை மிகுந்த பூஷனி—ஸ்ரீமதி (தேவி)

சரணுநுபல்லவி.

1. பூவுர வாணியே புகழ் மதுராணியே
புத்தியில் மிகுந்த சுத்த சித்தப் பிரதானியே (தேவி)

2. மங்கையர்க் கரசி மாருச் சுதேசி
மாட்சிமை செறிந்திடுஞ் சுயராஜ்ஜியப்ரகாசி (தேவி)

3. தவமுனி காந்தியை தன்கர மேந்தியே
தாங்கு மாங்கிலத்திலே பேரோங்கிடும்
வேதாந்தியே (தேவி)

4. நந்தமிழ் பாடுவோம் நாளுநங் கொண்டாடுவோம்
நாவலன் முஹம்மதி புருஹிம் கவிசூடுவோம் (தேவி)

---

## 14. தேசத் தொண்டு

"ஆனந்தம்-ஆனந்தம்-ஆனந்தமே" என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி தாளம்-ஆதி.

பல்லவி.

சேருங்கள் சேருங்கள் சேருங்களே—ஒன்று (சேரு)

அநுபல்லவி.

தேச நலமே செழிக்க
பேசும் தொண்டராய் முன்னிற்க (சேரு)

சரணம்.

1. கோருஞ் சுதந்திரம் கொள்கை பட்டிடவே
கூடும் அடிமைத்தனம் பறந்திடவே
பாரத நாடினி பண்பு வுற்றிடவே
பக்தியாய் நித்தியம் சத்தியங் கிட்டிட (சேரு)

2. ராட்டினக் கொடிகள் நாடெங்கும் பறக்க
நந்தேய மக்களின் நன்மைகள் பிறக்க
தாட்டிகத் தோடு தருமங்கள் சிறக்க
சந்தத மிந்தியா கந்தங் கமழ்ந்திட (சேரு)

தொகையறா.

3. சொல் வதற் கரிதான சுய தேயத் தலைவர்கள்
தொடுத் திட்ட போர் வென்றிட
தோன்றுஞ் சுயராஜ்ஜிய மோடு சுகமே ஜெய
தொல்லுலகில் நாம் கண்டிட

சரணத்தொடர்.

4. மாமுனிக் காந்தியின் மகிமை துலங்க
மாவந்தே மாதரம் மந்திரமுழங்க
பாமுஹம்மதிபுருஹிம் பண் விளங்க
பாடிக்கொண் டாடியே நாடெங்கும் கூடியே (சேரு)

## 15. ஸ்ரீமான் பண்டித மோதிலால் நேரு

"சிங்காரலேடி" என்ற வர்ணமெட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி.

பல்லவி.

மோதிலால் நேரு—பண்டித
மோதிலால் நேரு

அநுபல்லவி.

ஞான மோனப்ரகாச மேரு (மோ)

சரணம்.

1. ஓதும் தேசாபிமானி ஒற்றுமையா விரதம் பேணி
உண்மையா யுழைத்த மெய்ஞ்ஞானி-ஞானி-ஞானி ()

2. விதேச சரக்கைத் தள்ளி விடும்படி இந்தியர்க்கு
வீரத்தன மூட்டுவான் சொல்லி-சொல்லி-சொல்லி ()

3. சத்தியாக்கிரக மூர்த்தி சாற்றும் நம் சக்ரவர்த்தி
தக்கவழி காட்டிடுங் கீர்த்தி-கீர்த்தி-கீர்த்தி (மோ)

4. சங்கம் புகழ் காந்தி மார்க்கம் தன்னை யொப்புக்
கொண்டு ஊக்கம்
சாதுசபை கூட்டிடும் நோக்கன்-நோக்கம் நோக்கம்.

5. நாவலன் முஹம்மதி புருஹிம் நவில் நவீன
நந்தமிழ் பாடியே தேரு-தேரு-தேரு (மோ)

## 16. ஸ்ரீமான் பண்டித மாளவியா

"காக்ஷி கண் காக்ஷியே" என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டித மாளவி பக்திக் கொரு மேதாவி

அநுபல்லவி.

உண்டோ யிவருக்கிணை ஒற்றுமையாச் சஞ்சீவி (பண்டித)

சரணம்.

அன்னியர் சம்மந்தத்தை யகற்றவழி தேடுவான்
ஆத்திரத்தோடுமே சுயராஜ்ஜியப் போராடுவான்
உன்னதத் தொண்டர்களை யுகந்து வுறவாடுவான்
ஓதும் பெரியோர்கள் சபை மீதிற் செல்லநாடுவான்

ஊக்கமுள்ள தீர்க்க வுபன் யாசன்—குறை
தீர்க்கவே வல்லப முள்ள ரோசன்—சன்
மார்க்க நெறி காந்தி மஹான்சிஷன்—உயர்
மா முஹம்மதி புருஹிங் நேசன்

வாழ்வு சுகம் நீட
மகிழ்ந்துமே கொண்டாட
மூளும் பயமோட
முத்தமிழ் நித்தியம் பாட (பண்டித)

## 17. கதராடை

"வனஜாக்ஷி" என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி

அணிவோமே-அறஞ்சொரிந்திடுங் கதர் (அணி)

அநுபல்லவி.

அன்புண்டாக ஆசையாக
துன்பம்போக துணிவுண்டாக (அணி)

சரணம்.

1. துணிவோமே சுயராஜ்ஜியம் பெறவே
தூரதேசத்தோர் சூதுகளறவே
இனிய காந்திமஹான் இருதயன் புறவே
என்று நலங் குன்றிடாது
பண்டவர் போல் மண்டலத்தில் (அணி)

2. மேல் நாட்டின் கைத்தொழில் விருத்திகளொழிய
விதவிதமான மல்லின் மேன்மைக ளழிய
தாழ்மை யில்லாது நம்முள் சகல முந்தெளிய
சந்தோஷ மிகுந்திடவே
சந்ததம் நம் சொந்தக் கதர் (அணி)

3. அதிவிதமானகத ராடையினருமை
அனுதினம் நாமணிந் திடவரும் பெருமை
நித முஹம்ம திபுருஹிஞ்சொல் லினிமை
நேர்த்திமிகுப் பூர்த்தியான
சாஸ்திரங்க ளேத்தும் கதர் (அணி)

## 18. அஸ்திஞபுரம் ஸ்ரீமான் ஹக்கீம் அஜ்மல்ஹான்

"சரிசரி சாமுத்திரிகாலக்ஷணம்" வர்ணமெட்டு

இராகம்-சாம்போதி தாளம்-ஆதி.

பல்லவி.

அஜ்மல்ஹான்-அஜ்மல்ஹான் அருளானந்த-ஹக்கீம் (அஜ்)

அநுபல்லவி.

அடிமைத்தனமே யோடிட திடமாய்த்தினமே
போதிக்கும் (அஜ்மல்)

சரணம்.

1. விஜயமாகவே சபை விரைந்து கூட்டவல்லபன்
வீணுழைப்பை நீக்க மெத்த வீர சித்த முள்ளவன்
மேன்மை பெற்றவன்—கவி
வேந்தர்க் குற்றவன்—நாம்
வேண்டும் சுதந்திரமே பெற ஈன்ற
அவதாரமான (அஜ்மல்)

2. காங்கிரசினிலேயதி காரம்பெற்ற கண்ணியன்
காந்தியோடு சேர்ந்துவழி காட்டிடுங்காருண்ணியன்
கருணை சித்தாந்தன்—பல
கலைகளில் தேர்ந்தோன்—புவி
கலியும் படும்பழியும் செய் வோரழியும் படியே
செய்திடும் (அஜ்மல்)

3. மண்டலஞ் செழிப்படைய தொண்டருகச் சேருங்கள்
நன்று நலங் குன்றும் போதே வுன்றிடாது
தேருங்கள்

பண்டது போலவே—தேச
பக்தியாகவே—இனி
என்றும் முஹம்மதி புருஹிம் ஏற்றித்துதி போற்றும்
ஜெய (அஜ்மல்)

---

## 19. கைராட்டினம்

"குமரணேயே" என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஆதி

பல்லவி

சுற்றுவோமே நம் சொந்தக் கைராட்டினத்தை (சுற்று)

அநுபல்லவி

சுற்றுவோமே கைப்பற்றுவோமே—நம்
சொந்தக் கைராட்டினத்தை (சுற்று)

சரணம்

1 வெற்றிக் கொடி பிடித்து
வீர முரசடித்து
நற்றோர்களை யடுத்து
நம் தேயத்தோர் பிழைக்க (சுற்று)

தொஹைறபரு

தவமுனி காந்தி நமக்குப தேசமாய்
சாற்றிய பிரகாரமே
சந்தத மிந்தியா சுதந்திரம் பெற்றிட
தரணியில் யெல்லோருமே

பாட்டு

2 மல்லு காரிக்கன் பீசு
வகைவகை சில்க்கு ரோசு
எல்லா மகற்றி முஹம்ம
திபுரு ஹிந்துதித் தேற்றி (சுற்று)

---

## 20. ஸ்ரீமான் சுவாமி சிரத்தானந்தர்

"செந்தூரிலங்கும் தெய்வமே" என்ற வர்ணமெட்டு

இராகம்-ஸ்ரீராகம் தாளம்-ஆதி

பல்லவி

சாமி சிரத்தானந்தனே—சகலவர்க்கும்
சாற்றும்சுய ராஜ்ய மந்த்ரனே

அநுபல்லவி

1. பூமிபுகழும் போதன் பொங்கும் கல்விப்ரசாதன்
பூர்வீக இந்தியாவே ஜெயமே பெற
வேசிறையேகிய யோக விவேக (சாமி)

பல்லவி எடுப்பு

மாராச் சுதேச மூர்த்தியே—மகிழும் வந்தே
மாதர மோதுங் கீர்த்தியே

அநுபல்லவி எடுப்பு

2. பாரத தேவிபுத்ரா பாங்கரித்தோரின் மித்ரா
பலபல கலைகளில்த் தேர்ந்த வுதாரன்
நிலை தவகாந்திசொல் நெறி விலகாத (மாரா)

பல்லவி எடுப்பு

வீர வைராக்ய முள்ளவன்—இந்துமுஸ்லீம்
வேற்றுமை யோட்ட வல்லவன்

அநுபல்லவி எடுப்பு

3. சாருந் துயரறவே சாதகமே யுறவே
தகைபடகின் றெங்கும் சாதிக்குந்தீரன்
முஹம்மதிபு ருஹிம் தமிழலங் காரன் (வீர)

---

## 21. மதுபான வெறுப்பு

"சுயராகக்ஷிய மதிகத்தூரமில்லை" என்ற வர்ணமெட்டு

### இராகம்-கோக்சர்ஜான் தாளம்-ஏகம்.

பல்லவி

1. மதுபானமேயுனக்கு—வந்தனம் கோடியுண்டு
மறைந்திடுவாய் எங்கள் நாட்டை விட்டு

அநுபல்லவி

சதி மோசஞ் செய்திடும் சாரமில்லா மதுவே
சரணஞ் செய்தேனினி யகன்றிடுவாய்

தொகையறு

கள்ளே வுன் வெறியினுல் காசினியிற் கெட்டோர்கள்
கணக்கிடவே கூடுமோ
கருதி யென் நாட்டினரருந்தா விடிலுன்னைக்
கழுதையாகிலுந் தேடுமோ

பல்லவி எடுப்பு

2 உன்னாலே யல்லோ பலர் ஒட்டாண்டி யானார்கள்
ஓகோ சண்டாளப் பாவி மதுபானமே
எந்நேரமு உந்தன் யேக்கத்தினா லன்றோ
இக்கதியானது எங்கள் நாடு

தொகையறா

எங்களது நாட்டிற்கு யிடராகவே வந்துற்ற
யேது மில்லாத கள்ளே
பொங்கிடுமுன் வஞ்சகங் சூதுக்கிணையோதப்
புவிதனி லொன்றுமில்லை

பல்லவி எடுப்பு

3 கைப்பொருள் யாவும் போய் கடன்பட்டும் உடன்
கஷ்டமடையச் செய்வாய் மதுபானமே [பட்டும்
வையம் புகழும்வீர மாநகரில் வளரும்
மைந்தன் முஹமதி புரூஹிஞ் சொன்ன (மது)

---

## 22. சென்னை தமிழ்நாடு பத்திராதிபர் சேலம் டாக்டர் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு

"சுஜன ஜீவனா" என்ற வர்ணமெட்டு

இராகம்-கமாஸ் தாளம்-ரூபகம்

பல்லவி

வரத ராஜனே—காந்தி
மாமுனி சீஷனே—சேலம் (வரத)

அநுபல்லவி

பரத புத்திரனே—வைத்திய
பாக விர்த்திரனே
பற்றிடுந்துய-ரற்றிடவழி-கற்றதிருப்பூரனே சேலம் (வரத)

சரணம்

1 நன்னயக் கதர் தன்னையே—கட்ட
நாட்டினில் கைராட்டினம் சுற்ற
அன்னிய ருடை
அகற்றவே தடை
ஆசையாய்ப்-பிரயாசையாய்-யுபதேசித்தாயே விடை
சேலம் (வரத)

2 தேசீயச் சமராடுவோர் புகழ்
செய்யவே அவதார மானவா
ராஜரீகனே—தமிழ்
நாட்டின்—போதனே
நந்தேயமேசுதந்தரம் பெற வந்த ஜெய மந்த்ரனே
சேலம் (வரத)

3 செந்தமிழ்க் கவிபாடியே தொண்டு
செய்குவோம் மனந்தேரியே என்றும்
சொந்தமாகவே நாட்டின்
துன்பம் போகவே
சுகிர்த மோங்கிடும் முஹம்மதிபுருஹிம்புகழ்துதி ஓங்கவே
சேலம் (வரத)

## 23. பர்மாநாட்டின்

## தேசீயத்தலைவர் ஸ்ரீமான் பிக்ஷு உத்தமர்

"மாதர்களை நம்பொணுது" என்ற வர்ணமெட்டு

இராகம்-சௌராஷ்டிரம் தாளம்-ஆதி

பல்லவி

உத்தம ரத்திருச் சுதேசி—பிக்ஷு (உத்த)

அநுபல்லவி

இந்த வுலகம் புகழும் பெரும் ஞானச் சன்யாசி (உத்தம)

சரணம்

1 தொத்தும் அடிமைத்தனம் துறத்திடும்—ஞானி
தோணும்சித்த வைராக்ய தேசாபிமானி
ஒத்துழையா விரத முறுதியாய்ப் பேணி
ஓங்கும் பர்மாநாட்டி லுழைத்த நிதானி
உச்சிதமாகவே முச்சந்தித்தெரு
லெக்சர் செய்திடும் சச்சும் பிக்ஷு (உத்தம)

2 தேடுஞ் சுயராக்ஷியின் போராடும் விவேகி
தெழிவுறும் கலைகளில் தேர்ந்திட்ட யூகி
கூடும் சபைகள் நித்தங் கூட்டும் தியாகி
குறைபறந் திடநலம் கோறும் நல்யோகி
கொற்றவர் போற்றிடும் நற்றவ காந்தியின்
கட்டளை போல் நடந்திட்ட பிக்ஷு (உத்தம)

3 இந்தியர் பர்மியரெல்லோரு மொன்று
என்று வுரைத்து நர்ட்டின் இழிவதைக்கண்டு

சிந்தனை யோடு மனத்திட மிகக்கொண்டு
சிறையடைந்துசெய் திட்டார்தேசத் தொண்டு
ஜெகமதிலுயர் வீரநகர் வளர் முஹம்ம
திபு ருஹிமகி ழுற புகழும் பிக்ஷை (உத்தம)

## 24. அங்கோரா கவர்மெண்டதிபர் ஸ்ரீமான் காஜீ முஸ்தபா கமால்பாக்ஷா

"சாத்வீகப் போராட்டம்" என்றவர்ண மெட்டு.

இராகம்-தேசிகம் தாளம்-ஆதி.

பல்லவி.

காஜிமுஸ்தபா கமால் வேந்தனே—டர்க்கி
கான்ஸ்டாண்டி நோபிள் மகாராஜனே (காஜி)

அநுபல்லவி.

தேசிகராய் வந்துதித்தவனே—இங்கு
ஜீவித்திருக்க வோராதாரனே (காஜி)

மகுடம்.

சீனி சர்க்கரை தேனினித்திட
தோணுமின்னவர்—பேரா
ரானந்தம்
ஆங்கிலம்
ஆப்பிரிக்கா
ஆசியா

பேசிப்புகழும் சொக்கத்தங்கமே—சமர்
பீரங்கிப் போரிலிவன் சிங்கமே
பேருலகமே செழிக்க
வே முஹம்மதிபுருஹிம்
கூறுந்தமிழே தொனிக்கப் பேஸ், பேஸ், பேஸ், (காஜி)

---

## 25 துருக்கிரைட்டதிபர் ஸ்ரீமான் அன்வர் பாக்ஷா

"வேலாயுதக் குமரா" என்ற வர்ணமெட்டு,

இராகம்-தோடி தாளம்-ஆதி.

பல்லவி.

வாளாயுதம் தரித்த—வாளாயுதன்

அநுபல்லவி,

வங்கமேபுவி எங்குமே சொக்கத்
தங்கமே அன்வர் சிங்கமே—புகழ் (வாளா)

சரணம்.

கருணைகரப் பொருளோன்
திருநாம மணிந்த மேலோன்
செய்கை நல்லோன்
வங்கமேபுவி-எங்குமே-சொக்கத்
தங்கமே-அன்வர்-சிங்கமே புகழ் (வாளா)

தொஹையரு

இஸ்தம்பூல் சுல்தானின் சேனைத்தலைவரில்
இணையற்ற சுத்த வீரன்

இத்தாலி சைனியம் காற்ருய்ப் பறந்திட
எதிர்த்து வென்றிட்டதீரன்

சரண மெடுப்பு.

அகிலமெல்லாம் மெச்சிடும்
அன்வர்பே திறங் கொண்டாடும்
அமரோ ராடும்
வங்கமேபுவி எங்குமே சொக்கத்
தங்கமே அன்வர் சிங்கமே புகழ் (வாளா)

தொஹையரு.

தேசாபிமானிகளாய் முன்னிடுந் தொண்டரை
சிரமேற் சுமக்குந்தங்கன்
ஜெர்மனிக்காகவே பாரிஸின் சிகரியைச்
சிதரோடச் செய்த சிங்கன்

சரண மெடுப்பு.

ஜெயவீர நகர்பதி
சீலனிபுருஹிந்துதி
செய்வோம் ததி
வங்கமேபுவி எங்குமே சொக்கத்
தங்கமே அன்வர் சிங்கமே புகழ் (வாளா).

## 26. பம்பாய் ஸ்ரீமான் சேட் சோட்டானி

“காணவேணுங் காணவேணு மென்று”
என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 பம்பாய் பதிவளர் சேட்சோட்டானி-தேச
பக்தியில் சிறந்த சுத்த ஞானி—இப்
பாரினில் கிலாபத்திற்கு
நேர் முகமாய் நின்றுழைக்கும் நிதானி-அபிமானி ()

2 மிக்கவேதனம் படைத்த தங்கம் டர்க்கி
மேன்மை யடையச் செய்த சிங்கம்-என்று
மே யிந்தியருக்கு நலமே செழித்திட
பிரசங்கம் செய்தா ரெங்கும் (பம்பாய்)

3 லண்டன் நகர்க்குத் தூதுசென்று அங்கு
நந்தேயக் குறைகள் யாவும்விண்டு—இந்து
நாட்டின் வறுமைகளை யோட்டிடவே வைராக்யம்
கொண்டோர் வழிகண் டோர் (பம்பாய்)

4 சாந்த தயாள விசுவாசன்—வுயர்
தவமுனி காந்தி யுபன்யாசன்-மிகத்
தகை படவே கவிசொல் முஹம்மதிபுருஹிம்
நேசன் பிரகாசன் (பம்பாய்)

---

## 27. ஸ்ரீமான் கவிச்சக்கிரவர்த்தி சுப்பிரமண்யபாரதியார்.

"கார்க்க கடனுனக்கேயல்லா" என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி.

பல்லவி.

பாரதி—சுப்ரமண்யனே
பார் புகழ்ந்திடுங் காருண்யனே

சரணநுபல்லவி.

1 மாறுத தேசபக்தி வாய்ந்தபெருந்தியாகமூர்த்தி
மாதா பிதா குருவாய் வந்த கவிச் சக்ரவர்த்தி
வந்தேமாதர மந்திரன்
மா சுதந்திரத் தந்திரன் (பாரதி)

தொகையறு.

இணையற்ற இந்தியர்கள் இழிவுற்று இதம்பற்றி
என்றென்றும் ஜீவித்திட
இனிய சன்மார்க்கத்தை எடுத்திங்குரைத்தனர்
இப்புவியோர் ஈத்திட

சரணத் தொடர்.

2 ஏந்தும் பெரியோர்கள் மெச்சும் இங்கிர் தயுபன்யாசன்
ஏக சபை கூட்டிடவே இன்புறும் ஏகப்ரகாசன்
ஈடில்லாத் தவஞானியே
இந்து தேசாபிமானியே

தொகையறு.

சகலகலை வல்லவரெனவே யிவ்வுலகெலாம்
சாற்று முயரவதாரனே
சற்கரைத் தேனொழுக சரகவிகள் தயமுறுக
தான் பகர்ந்திடுந்தீரனே

சரணத்தொடர்.

3 தன்னல மெண்ணு துழைக்கும் சம்ப்ரதாயவாக்கியனே
தாஸன் முஹம்மதிபுரூஹிம் தமிழ்பாக்கியனே
சாது சங்கவுல்லாசனே
சாந்த தர்ம தயாளனே (பாரதி)

---

## 28. சென்னை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர்

“குஞ்சரிமோகக் குமரா” என்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகம் தாளம்-ஆதி.

பல்லவி.

மஞ்சரி பாரத பூமி என்றும்
வருத்தும் சத்திய மூர்த்தியே சாமி (மஞ்)

சரணநுபல்லவி.

1 அஞ்சா வைராக்யனே சபை
அடுத்து தன்னலம்விடுத்து குறைகள்
தடுத்து நம்மவர்க் கெடுத்துரைத்திடும் (மஞ்)

தொஹையரு.

பண்டுள்ளார் செய்துபெரும் பலன்பெற்ற தொழில்முறை
பகர்ந்தெடுத்தோதும்வல்லான் [யே
பாரில் ஒற்றுமையாத வீரதப்பிரசித்தரெனப்
பட்டமது பெற்றநல்லான்

பல்லவி யெடுப்பு

பஞ்சு நூற் பாவுகள் நீட-துயர்
பறந்து மறைந்து விறைந்து ஓடிட (பஞ்சு)

சரணுநுபல்லவி தொடர்

2 செஞ்சொல் வந்தே மாதரம் சொல்லி
செழிக்க இப்புவி தழைக்க சத்தியம்
நிலைக்க நம்மவர் பிழைக்க யுழைத்த (பஞ்சு)

தொஹையரு

மா மறுவுஞ்சுயராஜ்ஜியம் வாங்கவே யவதார
மான தவ காந்தி மந்த்ரன்
வருத்திடும் அடிமையெனும் கொடியதோர்பிணிகளை
மாற்றவழி கண்டதந்த்ரன்

பல்லவி யெடுப்பு

வஞ்சகம் நீக்கிடும் நீதன்—வீர
மா நகர் முஹம்மதிபு ருஹிம்சங்கீதன்

சரணுநுபல்லவி

3 விஞ்சை பிரபந்தனே நாம்
வேண்டிடுஞ் சுயராஜ்யம் பெற
தூண்டிடும் மனச் சுகிர்த மந்திர (மஞ்)

## 29. ஸ்ரீமான் சத்தி தாஸ்

"ஆலவாய்மதுராபுரி" என்ற வர்ணமெட்டு

இராகம்-எதுகுலகாம்போதி தாளம்-ஆதி

கண்ணிகள்

1 சார்ந்த சற்குணம் வாய்ந்த—சத்தி
தாஸ ு சாற்றும் வியாசமே
தாஸ ு சாற்றும் வியாசமே—இரு
தயமதிற் சுடர் வீசுமே (சார்ந்த)

2 உண்மை யோடு யுழைக்கு—முத்தம
ரோடுமே யுறவாடுவான்
யோடுமே யுறவாடுவான்—இந்தி
யோருக்கு நன்னயந் தேடுவான் (சார்ந்த)

3 நாம்படுந் துயர் யாவுங்—கண்டு
நவிலுஞ் சித்த வைராக்கியன்
நவிலுஞ் சித்த வைராக்கியன்—சுய
ராஜ்ய மந்திர வாக்கியன் (சார்ந்த)

4 தாண்டவம் புரிந்தாடு—மன்னியர்
சரக்கு முற்று மொழித்தவன்
சரக்கு முற்று மொழித்தவன்—மதி
தக்க யூக்கம் படைத்தவன் (சார்ந்த)

5 சேவை யோடிவர் ஜீவித்திட—மனந்
தேறி நாமே கொண்டாடுவோம்
தேறி நாமே கொண்டாடுவோம்—முஹம்ம
திபு ருஹிம் தமிழ்பாடுவோம் (சார்ந்த)

## 30. திருவீரமாநகர்

## ஸ்ரீமான் ஆ. முஹம்மதுஹான் சாஹேப்

"பவனகிரியதினிலுறை" என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

திரு வீர நகர் வளரும்
தேசீய முஹம்மது ஹான் (திரு)

சரணநுபல்லவி

1 அருமை சிறந்த தங்கம்
ஆழ்ந்த குணம் வாய்ந்த சிங்கம்
ஆனந்தத் துடனே கவர்ந்திட
பாவானந் தங்களே பகர்ந்திடும் (திரு)

தொஹையரு

பாரதத் தலைவர் முனி காந்தியின் கட்டளையைப்
பதியப் போதிக்குந்தீரன்
பகர்சுய ராஜ்ஜியப் பணியிலே தன்னலம்
பாரா துழைக்கும் வீரன்

பாட்டு

2 பக்தி விசுவாச-முள்ளான்
உத்தம சித்தாந்த-நல்லான்
பா கமழ்ந்திடவே-புகழ்ந்திடும்
மா முஹம்மதிபு ருஹி-மேவிடும் (திரு)

## 31. இந்தியநாட்டின் பெருமை

"கள்ளுச்சாராயம் குடியாதே" என்ற கும்மி
வர்ணமெட்டு

இராகம்-பைரவி தாளம்-ஆதி

1 வந்தேமாதரத்தைச் சந்ததமுந்தங்கள்
இந்தியிற்பூட்டுவீ ரிந்தியரே
முந்துமகந்தம் கமழ்வீரநகர்வளர்
முஹம்மதிபுருஹிம் நேயர்களே.

2 இந்தியாவானது இங்கிலாந்தைவிட
ஏற்றமுள்ள ஒரு நன்னாடு
நந்தவனஞ் சூழ்நகர் மதுரைதிரு
நாயக்கர் மாலதைக் கண்டுணர்வீர்

3 பள்ளியலங்காரம் சொல்ல முடியாது
டில்லியமைந்தது மின்னாடு
தெள்ளமுதூட்டிடும் இந்தியாச் சரிதை
தேடி யெடுத்து தெளிந்திடுவீர்.

4 சேரனும்சோழனும் பாண்டியமன்னனும்
செங்கோல் புரிந்தது மின்னாடு
சீருறுஞ் தஞ்சை நகர்சென் றங்குள்ள
சிகரம் கண்டு தெளிந்திடுவீர்.

5 கம்பரைப் போன்ற கவிராயரும்
கருணாகரர்களும் பிறந்த நாடு
பம்பாயருகே தாஜ்மஹாலின்வி னோதத்தைப்
பார்த்து வுள்ளத்தில் பதித்திடுவீர்.

6 கொள்ளிடங்காவிரி வெள்ளம்பெருகிடும்
கோதாவரிநதி யின்னாடு
பல்லாயிரமன்ன ரிங்காண் டமைத்திட்ட
பற்பல காக்ஷிகள் பார்த்துணர்வீர்.

7 திங்களில் மும்மாரி பெய்து வளங்கள்
செழிப்புற்றோங்குவ தின்னாடு
இங்குள்ள சரக்கு அன்னியர் நாட்டிற்கு
ஏற்றுமதி செய்வ தைத்தெரிவீர்.

8 தவத்திலுயர் முனி காந்தி மஹானவ
தாரம் புரிந்தது மின்னாடு
நவிலுஞ் சுதந்திரம் பெற்றிடவே யின்று
நாடிப்போ ராடுவ தின்னாடு.

---

## 32. தேசாபிமானிகள் வாழ்த்து

"மகமதியர் குலத்தி ல்மாணிக்கமாய்"
என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

கண்ணிகள்

1 பாரிலுயர் தவத்தின் பேரானந்தக்கிச்சனு
பண்டித மோதிலால் நேரு—பர்மாத்தலைவர்
பௌத்தர் உத்தமர் போலாரு
மண்டித மாளவிபாலுக் கோகலே
கண்டிதரான கவிஞன் தாகூர்

பாபு விபினச் சந்திரபால்—திலகர் தாதா
பாய் நவ ரோஜி காந்திமேல்.

2 நாட்டிலவதரித்து நமக்காகவே யுழைக்கும்
ஞானப்ரகாச ஆண்டுரூஸ்—கிராணிக்கலே
நாட்டி ஆர். நிமன் சி. ஆர். தாஸ்
லாலா லஜபதிராயும் மோகினி
நங்கை மங்களதேவி சரோஜினி
ராஜக் கோபால் சக்ரவர்த்தி—இலங்கைராம
நாதன் சிதம்பர மூர்த்தி.

3 காக்கிஞடாமாகாண காங்கிரசில் வைராக்யம்
காட்டிச் சமாதானஞ் சொல்லி—சௌக்கதலி
காருண்ய முஹம்மதலி
கற்பக மேகலை சுப்ரமண்ய சிவம்
இப்புவி யொப்பிடும் விற்பக குப்தா
கருணைக்கட லன்சாரியே—ராம்போஜதத்தர்
கஸ்தூரிபாய் பொம்மான்ஜியே.

4 சாமி விவேகாநந்தம் சாமி சச்சிதானந்தம்
சாரளத் தேவிபாலம்மா—சிரத்தானந்தம்
சத்திய மூர்த்தியே சீமான்
தர்மதயாளப் பண்டித சாவரி
குருமொழி பிசகா அரவிந்த மகரிஷி
தாய்நாட்டுச் சேட்டு சோட்டானி—பொன்னயராம
சாமிநாயக்கர் கிட் வாணி.

5 சேலம் வரதராஜன் சென்னை யாகூப் ஹாசன்
டில்லி ஹக்கீம் அஜ்மல்ஹான்—பகானந்தஜி
தென் கூடர் ஹாஜி முஹமதுகான்

செப்பிடு மிந்தியத் தேசத்தலைவர்கள்
இப்புவிமீதினில் ஜெய ஜெய மெனவே
ஜீவித்திருக்கவே வாழி—முஹம்மதிபு
ருஹிஞ் செந்தமிழ் நீடூழி.

---

## 33. ஸ்ரீமான் மஹாத்மா காந்தியடிகள் வாழ்த்து

"மரகதமயில் மீதேறியே" என்ற வர்ணமெட்டு

இராகம்-பாரீஸ் நோட் தாளம்-சாப்பு

பல்லவி

ஜெய ஜெய கரம் சந்த்ர மோகனக் காந்தி
தேனுருவாய்க் குருவான வேதாந்தி

சரணுநுபல்லவி.

நயவுபன் யாசி—ஞானச்சன்யாசி
நற்குண நற்தய—நற்புறும் நற்றவ (ஜெய)

விருத்தம்.

சிங்கப்பூர் வங்காளத் தென்னுப்பிரிக்கா வெங்கும்
திருப்பவனி சுற்றி
தங்கத் தரிக்கார் தயங்கவிடார் நம்ம மஹான்
சாத்வீகப் போராட்டத்தை
எங்குமே யுபதேச மெடுத்திங் குறைத்திட
இனிக்கும் நல்வாக்கியத்தோர்
சிங்கம்போல் காசினியில் தினம் தினம் வாழ்கவே
திருக்கரம் குவிக்க மாதோ.

பல்லவி எடுப்பு.

சிறை யடைந்திட வஞ்சாத் தேசிய மூர்த்தி
திகழ் முஹம்மதிபு றூஹிம் பண் கீர்த்தி
தேசோபகாரி-தீரவதாரி
திடமுடன் திடம் பழித்திட வுழைத்திடுங்கன(ஜெய)

---

## 34. கவிச்சக்கிரவர்த்தி ஸ்ரீமான் P. M. ஜெய்னுலாப்தீன்

"யர்கரீமே யாரகீமே யாரகீனே" என்ற வர்ணமெட்டு

பல்லவி.

பூவளம் மாவுடை குளம்பதி
பூதவம் பார் சன்னதி (பூவளம்)

அநுபல்லவி.

கோமள மயிலாடுந் தருஹா
குரு வே ஜெய்னுலாப்தீன் (பூவளம்)

சரணம்.

1 சிவகெங்கை சேதுபதி ஜமீன்வன்
தெப்பக்குளம் வழிந் தேக நீர்
புவனமதில் பெரும் மாரி பெய்திட
புகன்ற கவி யதி பதியினார் (பூவளம்)

2 பார்த்தோர் பிரமிக்க பதியின்முன் பெரும்
பாம்பை பாவினல் துணித்தவா
சீர்த்தி மிகுத்ததென் பாண்டி நாட்டினில்
சிறந்த பெரும் புகழ் படைத்தவா (பூவளம்)

3 ஓதுங் கவியதால் பூதலம்மதில்
ஓங்கு மற்புதக் காக்ஷியே
கீதம் முஹம்மதிபு ருஹிந்தமிழ்
கேட்கும் செவிக்கொரு மாக்ஷியே (பூவளம்)

---

## வாழி

வாழி பாரத மாதின்செந் தாமரை
வாழி ஞானியர் மஹரிஷி யுள்ளவர்
வாழி இந்துமுஸ் லீம்களின் தலைவர்கள்
வாழி நந்தமிழ் நவீனம் வாழியே.

### காந்தி

மஹாத்மா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | ந் | து | க் | க | ள் |
| மு | ஸ் | லீ | ம் | க | ள் |

ஒற்றுமை

யுடனிருங்கள்.

நந்தமிழ் நவீனம் முற்றிற்று.